குறுகிய / மூடிய இட நுழைவு (Confined Space Entry)

எப்போது முடிக்க வேண்டும் - எந்தவொரு குறுகிய / மூடிய இட நுழைவு நடவடிக்கைகளும் தொடங்குவதற்கு முன்

வேலையைத் தொடங்குவதற்கு முன் கீழே உள்ள ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்தவும்	ஒவ்வொரு கட்டுப்பாடு / பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்கான வழிகாட்டுதல்	பணியைச் செய்யும் நபர்(கள்)	வேலை தொடக்க சரிபார்ப்பாளர்
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:			
1 **குறுகிய / மூடிய இடநுழைவு வேலைக்கு செல்லும் முன், அனைத்து enegy இணைப்புகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளதா என்று சரிபார்க்கப்பட்டுள்ளது.** **குறுகிய / மூடிய இட நுழைவு வேலைக்கு எனர்ஜி ஐசலேஷன் தேவையா?** **□ ஆம் □ இல்லை** **ஆம் எனில்: எனர்ஜி ஐசலேஷன் சரிபார்ப்பு படிவத்தை பூர்த்தி செய்யவும்.** **இல்லையெனில்: படி 2 க்கு தொடரவும்**	• திட்டத்தின்படி அனைத்து எனர்ஜி மூலங்களும் அடையாளம் காணப்பட்டு, ஐசலேட் செய்து, லாக் மற்றும் டேக் செய்யப்பட்டுள்ளன. • வெடிக்கும் பொருட்கள் அல்லது வாயுக்களை அகற்ற, System (அமைப்பு) drain (காலி) செய்து, flush (சுத்தம் செய்து) அல்லது purge (வாயு நீக்கம் செய்து) செய்யப்பட்டு உள்ளது.		
குறுகிய / மூடிய இட நுழைவு			
நான் உறுதிப்படுத்தியுள்ளேன்:			
2 **ஆபத்துக்கள் அடையாளம் காணப்பட்டு, தேவையான கட்டுப்பாடுகள் செயல்படுத்தப்பட்டுள்ளன. எனவே வேலை தொடங்குவதற்கு பாதுகாப்பானது.**	• செய்யப்படும் வேலைக்கு ஏற்ப Risk Assessment (ஆபத்து மதிப்பீடு) செய்யப்பட்டுள்ளது. • வேலை தொடங்குவதற்கு முன், பணிக்குழுவினருடன் ஆபத்துகள் குறித்து கலந்துரையாடவும். • கூடுதல் ஆபத்துகளை (Additional Hazards) ஏற்படுத்தக்கூடிய ஒரே நேர பணிகள் (Simultaneous Operations) உள்ளனவா என்பதை சரிபார்க்கவும்.		
3 **வாயு பரிசோதனை செய்ய வேண்டிய இடைவெளி நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**	• தகுதிவாய்ந்த எரிவாயு சோதனையாளர் மூலம் எரிவாயு சோதனை செய்யப்படுகிறது • வேலை தொடங்கும் முன் ஆரம்ப வாயு பரிசோதனையும், தேவையான அடுத்தடுத்த பரிசோதனைகளும் முடிக்கப்பட்டுள்ளன. • பரிசோதனை முடிவுகளை சரிபார்த்து, வேலை தொடங்கும் முன் அடுத்தடுத்த வாயு பரிசோதனை எப்போது செய்ய வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளுங்கள்.		

4	**தேவையான காற்றோட்டம் உள்ளது மற்றும் அது சரியாக இயங்குகிறது.**	• குறுகிய / மூடிய இடநுழைவு இடத்தில் தொடர்ந்து காற்றோட்டம் வழங்கப்படுகிறது. • இயந்திர காற்றோட்டத்தைப் பயன்படுத்தினால்: – முழு இடத்திலும் தொடர்ந்து காற்றோட்டம் கிடைக்கும்படி நெகிழ்வான காற்றுக் குழாய் (Flexible Ducting) சரியாக அமைக்கப்பட்டுள்ளது. – நிலைமின் (Static Electricity) ஆபத்தைத் தடுக்க, உபகரணங்கள் சரியாக இணைக்கப்பட்டு (Bonded) மற்றும் தரையுடன் இணைக்கப்பட்டுள்ளன (Grounded). • காற்று வரும் இடம் (Ventilation Inlet) – தீப்பிடிக்கும் வாய்ப்பு உள்ள இடத்திற்கு அருகில் இல்லை. – காற்றோட்டம் காற்று/வானிலை காரணமாக பாதிக்கப்படாது; காற்று செல்ல எந்த தடையும் இல்லை – வாகனம் அல்லது ஜெனரேட்டர் புகை போன்ற மாசடைந்த காற்று உள்ளே வராத வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.		
5	**வெளியே ஒரு கண்காணிப்பாளர் (Attendant) நியமிக்கப்பட்டுள்ளார். உள்ளே செல்லும் முன் தொடர்பு கொள்ளும் முறை ஒப்புக்கொள்ளப்பட்டு சோதனை செய்யப்பட்டுள்ளத.**	• குறுகிய / மூடிய இடநுழைவு இடத்தின் நுழைவு இடத்தில், இந்த பணிக்காக நியமிக்கப்பட்ட கண்காணிப்பாளர் (Attendant) இருக்கிறார். • கண்காணிப்பாளர் (Attendant) தனது பொறுப்புகள் என்னென்ன என்பதை அறிந்து, அவற்றை விளக்க முடியும்: – முன்கூட்டியே ஒப்புக்கொண்ட தொடர்பு முறைகளை (எ.கா., கை சைகை, வானொலி) பயன்படுத்துதல். – குறுகிய / மூடிய இடநுழைவு இடத்தில் பணிபுரியும் நபர்களை தொடர்ந்து கண்காணித்தல். – குறுகிய / மூடிய இடநுழைவு இடத்திற்குள் நுழைவு மற்றும் வெளியேறும் விவரங்களை பதிவு செய்தல். – குறுகிய / மூடிய இடநுழைவு இடத்தில் ஏற்படும் மாற்றங்களை தொடர்ந்து கண்காணித்தல். – தேவைப்பட்டால் அவசரகால மீட்பு நடவடிக்கையை தொடங்குதல்.		
6	**எனது சுவாசக் கருவி (Breathing Apparatus) நல்ல நிலையில் இருந்து, சரியாக செயல்படுகிறது.** **சுவாசக் கருவி (Breathing Apparatus) தேவையில்லை என்றால், அடுத்த கட்டத்திற்குச் செல்லவும்.**	• சுவாசக் கருவி (Breathing Apparatus) முழுமையாக இருந்து, சான்றளிக்கப்பட்டு, நல்ல நிலையில் செயல்படுகிறது. • முக்கிய காற்று வழங்கல் (Main Air Supply), சான்றளிக்கப்பட்ட சுவாசக் காற்றாக இருந்து, சரியாக இணைக்கப்பட்டுள்ளது. • அவசரகால தப்பிக்கும் கருவி (Escape Pack), உள்ளே செல்லும் முன் தயார் நிலையில் இருந்து, சரியாக செயல்படுகிறது.		
7	**அவசரகால மீட்பு திட்டம் தயார் நிலையில் உள்ளது மற்றும் தேவையான போது உடனடியாக செயல்படுத்த முடியும்.**	• உள்ளே செல்லும் முன், கண்காணிப்பாளர் (Attendant) மற்றும் மீட்புக் குழு (Rescue Team) உடன் தொடர்பு கொள்ளும் முறைகள் குறித்து விவாதிக்கவும். • மீட்புக் கருவிகள் (Rescue Equipment) பணியிடத்தில் தயார் நிலையில் உள்ளன. • பணியாளர், திட்டத்தின்படி தேவையான மீட்புக் கருவிகளை (எ.கா., பாதுகாப்பு பட்டை (Harness), மீட்டெடுக்கும் கருவி (Retrieval Device)) அணிந்துள்ளார். • மீட்புக் குழு (Rescue Crew): - உடனடியாக உதவ தயாராக உள்ளது. - இந்த வேலையுடன் தொடர்புடைய குறிப்பிட்ட ஆபத்துகளை அறிந்துள்ளது. -தேவைப்பட்டால், மீட்புக் குழு மீட்பு திட்டத்தை செயல்படுத்தத் தயாராக உள்ளது.		

இந்த கட்டுப்பாடுகள் / பாதுகாப்புகள் நடைமுறையில் உள்ளனவா மற்றும் வேலையைத் தொடங்குவதற்கு முன்பு சரிபார்க்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்தவும். ஏதாவது மாற்றம் ஏற்பட்டால் நிறுத்தி உதவியை நாடுங்கள்.

	அச்சிடப்பட்ட பெயர் மற்றும் பொறுப்பு	கையொப்பம்	தேதி
வேலை தொடக்க சரிபார்ப்பாளர்			

குறுகிய / மூடிய இட நுழைவு (Confined Space Entry)

